**ஜூன் – 28**

**"நீ உன்னை ஞானியென்று எண்ணாதே; கர்த்தருக்குப் பயந்து, தீமையை விட்டு விலகு." - நீதி 3 : 7.**

தேவனுடைய பிள்ளைக்கு அகந்தையை விட, அதிக ஆபத்தானது வேறு ஒன்றுமில்லை. இருதயத்தின் சரியான முன்னேற்றத்திற்கும் சீர்திருத்தத்திற்குமுள்ள வழியில் அது தடைகளை ஏற்படுத்துகிறது. மற்றவர்களுக்கு உண்மையாகவே உபயோகமாயிருப்பதைத் தடை செய்கிறது. விசேஷமாகத் தேவனுடைய ஊழியத்தில் உபயோகமாயிருப்பதைத் தடை செய்கிறது. ஏனென்றால், "தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்" என்று அவருடைய வார்த்தை கூறுகிறது. தன்னம்பிக்கைக்குப் பதிலாகத் தன்னுடைய பலவீனங்களையும் அபூரண நிலையையும் ஞாபகத்தில் வைத்து, தன்னையே நம்பாத குணத்தை உடையவர்களாயிருக்க வேண்டும் என்றும், இதற்கு ஒத்த வகையில் தேவனுக்கு மிகவும் அதிக பயபக்தியையும், அவர்பேரில் சார்ந்திருப்பதையும் உடையவர்களாயிருக்க வேண்டுமென்றும், ஞானம் உத்தரவிடுகிறது. இப்படிச் செய்வது வேறு எதையும் விட, நம்மைப் பலப்படுத்தி நம்முடைய விழுந்துபோன, ஸ்திரீயினுடைய தீமையிலிருந்து விலகிச்செல்ல நம்மை சாத்தியமாக்கும். **- Z ’96, 263 (R 2060).**

தன்னையே ஞானியென்று ஒருவர் எண்ணுவது, தன்னுடைய சொந்த அறிவு சம்பந்தமாக சுயதிருப்தியையும், சுயதேவையான பூர்த்தியான நிலையையும் உடையவராயிருக்கிறார் என்பதைக் குறிக்கிறது. இப்படிப்பட்டவர்கள் போதிக்கப்படக் கூடாதவர்கள்; இவர்கள் தங்களுடைய வழிகளைத் திருத்தாவிடில், சத்தியத்திலிருந்து நிச்சயமாக விழுந்து போவார்கள். இந்தக்குறை சரியாக்கப்பட அவர்கள் விரும்புவார்களானால், அவர்கள் தேவனுக்குத் தங்களுடைய இருதயத்தில் முதல் இடத்தைக் கொடுக்கக் கற்றுக் கொள்ளுவார்களாக. இவ்விதமாக அவர்கள் அக்கிரமத்திலிருந்து விலகிச் சென்று, நன்மையை அப்பியாசிக்கச் சாத்தியமாக்கப்படுவார்கள். **-P ’34, 95.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

உபா 9:7; 15:5; சங் 131:1,2; நீதி 10:8; 22:4; 30:32; ரோம 12:16; 1கொரி 3:18; உபா 10:12; யோசு 24:14; 1சாமு 12:24; யோபு 28:28; 37:24; சங் 25:12-14; 103:11,13,17.

**கோபுர வாசிப்பு : Z ’13, 57 (R 5186)**

**வினாக்கள் :** இந்த வசனத்தின் சம்பந்தமாக இந்த வார அனுபவங்கள் என்ன? அவை எவ்வாறு சரிக்கட்டப்பட்டன? அவை எதில் முடிந்தன?